**ஊத்தங்கரை அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் இளைஞர் எழுச்சி நாள் கொண்டாட்டம் மற்றும் ஆயிரம் பனை விதைகளை ஊத்தங்கரை சின்னப்பனேரியில் விதைத்தல்.**

ஊத்தங்கரையில் உள்ள அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளான அக்டோபர் 15ம் தேதியை "இளைஞர் எழுச்சி நாளாக இன்று (14.10.2023) கல்லூரியில் கொண்டாடப்பட்டது.அதை தொடர்ந்து பேரணி மற்றும் பனை விதை நடுதல் பணியை கல்லூரி முதல்வர் எப்சிபா ஏஞ்சலா துவக்கி வைத்து.டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும், அவர் நிகழ்த்திய சாதனைகள் பற்றியும் அவரின் எழுச்சிமிகு பொன்மொழிகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அதைத் தொடர்ந்து 100 நாட்டு நலப்பணித் திட்ட மாணாக்கர்கள் மூலம் ஆயிரம் பனை விதைகளை ஊத்தங்கரை சின்னப்பனேரியில் விதைத்தனர். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் திரு தியாகராஜன் அவர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தார். செஞ்சிலுவை சங்க தலைவர் மருத்துவர் தேவராசு, நேசம் அறக்கட்டளை தலைவர் குணசேகரன், வணிகர் சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.அனைத்துதுறை தலைவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தார்கள்.

ஊத்தங்கரையில்

# பனை விதைகள், மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி



ஊத்தங்கரை, அக்.16-

ஊத்தங்கரையில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் பிறந்த நாளையொட்டி ஊத்தங்கரை அரசு பாலிடெக்னிக் கல்லூரி, நேசம் தொண்டு நிறுவனம், இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி கிளை ஆகியவை சார்பில் சின்னப்பனேரியில் 1,000 பனை விதைகள், 100 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் எப்சிபா ஏஞ்சலா துரைராஜ் தலைமை தாங்கினார். ரெட்கிராஸ் சேர்மன் டாக்டர் தேவராசு, துணைத்தலைவர் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவிகள் 100 பேர் கலந்து கொண்டு 1,000 பனை விதைகள் மற்றும் 100 மரக்கன்றுகளை நட்டனர். இந்த பணியை தாசில்தார் திருமலை ராஜன் பார் வையிட்டார். இதற்கான ஏற்பாடுகளை நேசம் குணசேகரன், சிவகிரி மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் தியாக ராஜன் மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.